**Crl. Misc.39**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC .No.28/ 2023**

Deposition of Witness : DW1

| | | | |
|---|---|---|---|
| Name | **பாலசுப்ரமணியன்** | Taluk | |
| Father Name | **ராமசாமி** | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 09.04.2025.** | | | |

**1, 3, 4 எதிரிகள் ஆஜர். 5 வது எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை :**

1) நான் இந்த வழக்கில் 1வது எதிரி ஆவேன். நான் கரூர் விவிஜி நகரில் வாடகை வீட்டில் வசித்து வருகிறேன். எனது வீட்டின் பக்கத்தில் அழகேஸ்வரி மற்றும் அவரது மகள் சித்திரைசெல்வி வசித்து வந்தார்கள். அழகேஸ்வரியின் தங்கச்சி மகள் அ.சா.1 ஆனஜோதிமுருகேஸ்வரியை 30.01.2012 ம்தேதியன்று எனக்கு திருமணம் செய்து வைத்தார்கள். திருமணத்தின்போது தோடு, மூக்குத்தி , செயின் மற்றும் மோதிரம் ஆக மொத்தம் 8 பவுன் நகை அ.சா.1 க்கு கொடுத்தார்கள். எனக்கு எந்த சீர்வரிசையும் செய்யவில்லை. திருமணமாகி 3 வது நாள் அ.சா.1 க்கு காக்கா வலிப்பு வந்தது. அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். பிறகு 04.05.2012 ம்தேதியன்று கரூர் சரவணக்குமார் நரம்பியல் மருத்துவமனைக்கு அழைதது சென்று பரிசோதனை செய்தோம். அப்போது காக்காவலிப்பு நோய்க்கு மருந்து எடுத்து கொள்ளும் தகவலை சொன்னார்கள். அதன் பின்னிட்டு அ.சா.1 கர்ப்பமானார்.

2) 14.05.2012 ம்தேதியன்று கரூர் பிரியங்கா மருத்துவமனைக்கு பரிசோதனைக்கு சென்றோம். அப்போது மருத்துவர் வேறு ஏதாவது மருந்து எடுத்து கொள்கிறாரா என்று கேட்டார். அப்போது நாங்கள் காக்காவலிப்பு நோய்க்கு மருந்து

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்(FAC),
கரூர்.

எடுத்து கொள்வதாக சொன்னோம். அதனால் குழந்தைக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமா என்று கேட்டோம். அதற்கு மருத்துவர் முழு பரிசோதனை செய்தால்தான் தெரிய வரும் என்று சொன்னார். 29.05.2012 ம்தேதியன்று முழு உடல் பரிசோதனை செய்தோம். பரிசோதனை செய்த மருத்துவர் என் முன்னிலையில் அ.சா.1 க்கு சிறு வயது முதல் காக்கா வலிப்பு நோய் இருப்பதாக சொன்னார். மருத்துவர் அப்போது அ.சா.1 க்கு ஒரு கிட்னி மட்டுமே இருப்பதாக சொன்னார். தொடர்ந்து மருந்து எடுத்துக்கொண்டால் குழந்தைக்கு பாதிப்பு ஏற்படும் என்று மருத்துவர் சொன்னார். அப்போது அ.சா.1 காக்கா வலிப்பு நோய் இருக்கிற விவரத்தை என்னிடம் மருததுவர் சொன்னதற்காக பிரச்சனை செய்தார்.

3) அ.சா.1 ஒட்டன்சத்திரத்தில் கிறிஸ்துவ மிஷினரி மருத்துவமனையில் 18 வருடங்களாக மருந்து எடுத்து கொண்ட விவரத்தை சொன்னார். பின்னிட்டு 17.10.2012 ம்தேதியன்று எனது மூத்த அக்கா ரேவதியின் கணவர் சாலை விபத்தில் உயிரிழந்தார். அப்போது என் அம்மா அவர்களுடன் இருந்தார். அதற்கு முன்பு வரையும் நானும், அ.சா.1 ம் தனித்தனியாகத்தான் வசித்து வந்தோம். முன்பகுதியில் சாமான் போட்டு வைத்திருந்தோம். பின்பகுதியில் சமையல் செய்து வாழ்ந்து வந்தோம். அ.சா.1 ன் அப்பா, அம்மா வந்து என் மகளுக்கு வளைகாப்பு செய்யவேண்டும் என்று கேட்டு கொண்டதின்பேரில் 28.10.2012 ம்தேதியன்று வளைகாப்பு நடந்தது. அதற்கு என் அம்மா சொன்னபோது அவர்களது மருமகன் இறந்து 10 நாட்கள் ஆனது என்றும், எந்த காரியமும் செய்யவில்லை என்றும், இந்த விசேசம் இப்போது வேண்டாம் என்றும், சொன்னார். அதற்கு அ.சா.1 ன் அப்பா, அம்மா, அ.சா.1 ஒத்து கொள்ளவில்லை.

4) உனது அக்கா வீட்டுக்காரர் இறந்து விட்டார் என்றால் நல்லகாரியம் செய்யகூடாதா என்று அ.சா.1 பிரச்சனை செய்தார். அதனால் அவர்களை அழைக்காமல் நானே எனது உறவினர்கள் வைத்து வளைகாப்பு செய்தோம். அப்போதே அ.சா.1 ஐ அழைத்து சென்றார்கள். பிறகு நான் திரும்ப அழைத்து வந்தேன். 09.01.2013 ம்தேதியன்று ஒட்டன் சத்திரம் கிறிஸ்துவ மருத்துவமனைக்கு அ.சா.1 ஐ அழைத்து சென்றேன். அப்போது மருத்துவர் அ.சா.1 இடம் நான் உங்களை திருமணம்

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்(FAC),
கரூர்.

செய்து கொள்ளவேண்டாம் என்று அறிவுறுத்தியும் , நீங்கள் திருமணம் செய்து கொண்டீர்கள் என்று சொன்னார்கள். அதன்பிறகு அ.சா.1ன் பெற்றோர்கள் வந்து அழைத்து சென்றார்கள். அப்போது நான் கரூரில் உள்ள மருத்துவமனையில் பார்க்கலாம் என்று சொன்னேன். அதற்கு அ.சா.1ன் பெற்றோர் மறுத்து கூட்டி சென்றுவிட்டார்கள்.

5) பின்னிட்டு 01.03.2013ம்தேதியன்று மகன் பிறந்தான். தகவல் தெரிந்து பார்க்க சென்றேன். அ.சா.1ன் பெற்றோர் என்னை பார்க்க அனுமதிக்கவில்லை. எனது அம்மாவிடம் பிரச்சனை செய்தார். எனது அம்மாவை ஊருக்கு அனுப்பி வைத்தேன். நான் இருந்து பார்த்துவிட்டு வந்தேன். நான் HDFC வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வந்தேன். அதனால் மார்ச் மாதம் வருட இறுதியன்று விடுப்பு கிடைக்காது என்றும், பிறகு ஏப்ரல் 2ம் தேதி அ.சா.1ஐ பார்க்க சென்றேன். அ.சா.1, அவரது பெற்றோர் ஆகியோர் என் மகனை பார்க்க என்னை அனுமதிக்கவில்லை. பின்னிட்டு எனது பெற்றோர், பெரியப்பா, பெரியம்மா ஆகியோர்களை அழைதது கொண்டு என் மகனை பார்க்க சென்றோம். அதற்கு அவர்கள் திரும்ப வரக்கூடாது என்று சொல் லி என்னை அடித்து சட்டை கிழித்தார்கள். உடனே பொள்ளாச்சி காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளிக்க சென்றேன். அதற்கு அவர்கள் இது குடும்ப பிரச்சனை என்றும், அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்க சொன்னார்கள். அதற்குள் அ.சா.1 அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார்.

6) நாங்கள் அங்கேயே இருந்ததால் விசாரணைக்கு சென்றோம். அப்போது அங்கிருந்த காவல் ஆய்வாளர் அ.சா.1 மற்றும் அவரது பெற்றோர்களை கண்டித்து சேர்ந்து வாழுமாறு அ.சா.1 இடம் அறிவுறுத்தினார். அப்போது அ.சா.1 ஒரு வருடம் கழித்து யோசனை செய்து சொல்வதாக சொன்னார். பின்னிட்டு நான் சமரசம் பேசி குழந்தைக்கு பெயர் சூட்டி வீட்டிற்கு அழைத்து சென்றேன். பின்பு அ.சா.1 ன் பெற்றோர் வந்து அ.சா.1 ஐ அழைத்து சென்றார்கள். நான் வங்கியில் வேலை பார்த்து கொண்டிருந்தால், அவர்கள் தகவல் கொடுக்காமலே அழைத்து சென்றார்கள். பின்பு பக்கத்தில் உள்ள எனது பெரியம்மாவை விசாரித்துதான் தகவல் தெரிந்து கொண்டேன்.

Sd/–R.Mahesh

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்(FAC),
கரூர்.

பின்னிட்டு போனில் தொடர்பு கொள்ள முயற்சிசெய்தபோது அ.சா.1 போனை எடுக்கவில்லை.

7) நான் நேரில் சென்றபோது பிரச்சனை செய்து வரக்கூடாது என துரத்திவிட்டார். எனது வங்கிக்கு அருகில் ஒரு ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் நித்யா என்பவர் பணிபுரிந்து வந்தார். காந்திகிராமம், வடக்குபாளையத்தில் மனைகளை என்னுடன் பணிபுரிந்தவர்கள் கிரையம் பெற்றார்கள். அதற்கு தேவையான ஆவணங்களை கொடுத்து நானும் ஒரு மனை வாங்கினேன். நான் வேலை செய்கின்ற வங்கியிலேயே லோனை போட்டேன். 30.10.2015 ம்தேதியன்று மேற்படி மனையை வாங்கினேன். மேற்படி மனை வாங்கியபிறகு அ.சா.1 அழைத்து வந்து குடும்பம் நடத்தலாம் என்று கேட்டபோது வரமுடியாது என்று சொன்னார். பின்னிட்டு பத்திரிக்கையை தபால் மூலம் அனுப்பினேன். அதை அ.சா.1ன் தகப்பனார் பெற்று கொண்டார். அதற்கு அவர்கள் விசேசத்திற்கு வரவில்லை. திரும்பவும் நான் அழைக்க சென்றபோது நான் வரக்கூடாது என்று சொல்லி என் மீது வழக்கு தாக்கல் செய்தார். டிவிசி எண். 1/2016 என்ற வழக்கும், ஜீவனாம்சம் கோரி ஒரு வழக்கும் என் மீது தாக்கல் செய்தார். நான் மேற்படி இரண்டு வழக்குகளிலும் ஆஜரானேன். நான் வழக்கில் சமரசமாக போகலாம் என்று பேசினோம். பிறகு வழக்கு சம்பந்தமாக என்னுடைய வங்கிக்கு வந்து விசாரணை செய்தும், அறிவிப்பும் அனுப்பினார்கள். என்னுடைய சம்பள பட்டியல் வேண்டும் என்று எனது மேலதிகாரிக்கு கடிதம் அனுப்பினார்கள். எனக்கு அசிங்கமாக இருந்தது. அதனால் எனது மேலதிகாரி என்னை வேலை விட்டு செல்லுமாறு சொன்னார்.

8) பின்னிட்டு அ.சா.7 நித்யா என்பவர் என் வங்கிக்கு வந்தார். அவர் பிரதீப் என்பவரை காதலிப்பதாகவும், அவருக்கு வேலை இல்லை என்பதால் வீட்டில் ஒத்து கொள்ளவில்லைஎன்றும், அதனால் அவருக்கு வேலை வாங்கி கொடுக்குமாறு சொன்னார். அவரை நான் பார்த்திருப்பேன் என்று சொல்லி, அவரது போட்டோவை எனக்கு அனுப்பினார். நான் குடும்ப பிரச்சனை காரணமாக வேலை விட்டு போக

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்(FAC), கரூர்.

சொன்னதால் மனஉளைச்சலில் இருப்பதாகவும், அதனால் அந்த சூழலில் என்னால் உதவி செய்யமுடியாது என்று சொன்னேன். திடிரென்று நான் வேலை விட்டு வந்ததால் என்னுடைய வீட்டு லோனை சரியாக கட்டமுடியவில்லை. ரொம்ப கஷ்டமாக இருந்ததால் 30.12.2019 ம்தேதியன்று வீட்டை விற்றுவிட்டேன். நான் ஏற்கனவே குடியிருந்த வீட்டிற்கு சென்று வசித்து வந்தேன்.

9) பின்னிட்டு அ.சா.7 நித்யா என்பவர் எனக்கு போன் செய்தார். எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும் என்று சொல்லி , காவல் நிலையத்திற்கு வர சொன்னார். காலை 10 மணிக்கு சென்றேன். அப்போது காவல் ஆய்வாளர் , முதல் மனைவி இருக்கும்போது 2 வதாக நித்யா என்பவரையும், 3 வதாக சுதா என்பவரை திருமணம் செய்ததாக சொன்னார். அதற்கு நான் மறுத்து நித்யா அவர் விரும்பும் நபரின் போட்டோவை காட்டினேன். அதற்கு போலிசார் அந்த புகைப்படத்துடன் மாலை 5 மணிக்கு வருமாறு என்று சொன்னார். மாலை சென்றபோது அந்த புகைப்படத்தை பார்த்துவிட்டு என்னை சிறையில் அடைத்தார்கள். பிறகு வெளியே வந்தபிறகுதான் என்ன நடந்தது என்று விசாரித்து தெரிந்து கொண்டேன். என்னுடன் பணிபுரிந்த முகமது சுல்தான் என்பவர் அ.சா.1 ஜோதிமுருகேஸ்வரிக்கு அ.சா.7 நித்யாவின் போன் நம்பர் வாங்கி கொடுத்து பழக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். அப்போதுதான் அ.சா.1 என் மீது விவாகரத்துகோரி வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரிய வந்தது.

10) அ.சா.1 ன் இடம் எந்த பணமோ, நகையோ கேட்டு கொடுமை படுத்தவில்லை. நித்யா மற்றும் சுதா ஆகியோர்களை நான் திருமணம் செய்யவில்லை. அவர்கள் கொடுத்திருக்கும் புகைப்படம் உண்மையில்லை. பிறகு நித்யா நான் வீடு வாங்குவதற்காக கொடுத்த எனது ஆதார் அட்டை, புகைப்படங்களை வைத்து பதிவு சான்றிதழ் பெற்றிருப்பதாக தெரிந்து கொண்டேன். நான் காவல் நிலையத்தில் உண்மைகளை சொன்னபோது அவர்கள் அதை கண்டு கொள்ளவில்லை. முற்றிலும் என் மீது பொய்யாக பதிவு செய்யப்பட்ட வழக்காகும். அதனால் இந்த வழக்கில் இருந்து என்னை விடுவிக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

11) மருத்துவர் சரவணக்குமார் வழங்கிய அ.சா.1 ன் மருத்துவ குறிப்புகள் தாக்கல்

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்(FAC),
கரூர்.

செய்கிறேன். **மேற்படி மருத்துவ குறிப்புகள் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிரியங்கா மருத்துவமனையில் வழங்கப்பட்ட மருத்துவ குறிப்புகள் தாக்கல் செய்கிறேன். **மேற்படி மருத்துவ குறிப்பு எ.சா.ஆ.2 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** அப்போலோ மருத்துவமனையில் முழு பரிசோதனை செய்ததற்கான மருத்துவ சீட்டு தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஆவணம் எ.சா.ஆ.3 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** ஒட்டன்சத்திரம் கிறிஸ்துவ மருத்துவமனையில் வழங்கப்பட்ட மருத்துவ சீட்டு தாக்கல் செய்கிறேன். **மேற்படி மருத்துவ குறிப்பு எ.சா.ஆ.4 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** PSG மருத்துவமனையில் அ.சா.1 க்கு வழங்கப்பட்ட மருத்துவ சீட்டு தாக்கல் செய்கிறேன். **மேற்படி மருத்துவ குறிப்பு எ.சா.ஆ.5 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

12) பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் அ.சா.1 மற்றும் நான் கொடுத்த வாக்குமூலங்களின் உண்மை நகல்களை தாக்கல் செய்கிறேன். **மேற்படி வாக்குமூலங்கள் எ.சா.ஆ.6 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** MC NO. 1/2016 என்ற வழக்கில் அ.சா.1 ன் சாட்சியத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **மேற்படி சான்றிட்ட நகல் எ.சா.ஆ.7 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** அ.சா.1 க்கு தபாலில் அனுப்பிய புதுமனை புகுவிழா அழைப்பிதழ் தாக்கல் செய்கிறேன். **மேற்படி புதுமனைபுகுவிழா அழைப்பிதழ் எ.சா.ஆ.8 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** HDFC வங்கியில் எனக்கு வழங்கப்பட்ட விடுவிப்பு கடிதம் தாக்கல் செய்கிறேன். **மேற்படி விடுவிப்பு கடிதம் எ.சா.ஆ.9 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** அ.சா.7 ன் புகைப்படம் மற்றும் குறுந்தகடுகளை தாக்கல் செய்கிறேன். **மேற்படி புகைப்படம் மற்றும் குறுந்தகடுகள் எ.சா.ஆ.10 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

13) ஸ்டுடியோவில் வழங்கப்பட்ட ரசீதை தாக்கல் செய்கிறேன். **மேற்படி ரசீது எ.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் மனையை விற்றதற்கான கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **மேற்படி கிரையப்பத்திரம் எ.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அ.சா.1 விவாகரத்து கோரி தாக்கல் செய்த மனுவின் சார்பு நகலை தாக்கல் செய்கிறேன். **மேற்படி மனுவின் சார்பு நகல் எ.சா.ஆ.13**

Sd/-R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்(FAC),
கரூர்.

**ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வழக்கின் தற்போதைய நிலையை தாக்கல் செய்கிறேன். **மேற்படி Case Status எ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் பி.காம் சி.ஏ படித்துள்ளேன். அ.சா.1 க்கும் , எனக்கும் 30.01.2012 ம்தேதி பெற்றோர்கள் முன்னிலையில் பேசி திருமணம் செய்து வைத்துள்ளனர் என்றால் சரிதான். முதல்விசாரணையில் அ.சா.1 க்கு திருமணமாகி 3 வது நாள் காக்கா வலிப்பு நோய் ஏற்பட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைதது சென்று தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அ.சா.1 க்கு காக்கா வலிப்பு சம்பந்தமாக அவரது பெற்றோரிடம் ஏமாற்றி திருமணம் செய்து வைத்தீர்கள் என்று பஞ்சாயத்து பேசவில்லை என்றால் சரிதான். அ.சா.1 உடன் தாம்பத்ய உறவு கொண்டு எனக்கு 8 வயதில் ரித்விக் என்ற ஆண் குழந்தை உள்ளது என்றால் சரிதான். முதல் விசாரணையில் அ.சா.1 ன் பெற்றோர்களிடம் வரதட்சணை கேட்டு மேலும் நகை , பணம் வேண்டும் என்று வரதட்சணை கேட்டு அடித்து துன்புறுத்தி, தொந்தரவு செய்தோம் என்றால் சரியல்ல.

2) அ.சா.1 க்கு குழந்தை பிறந்த பிறகு குடுமபம் நடத்த வராததால் சேர்ந்து வாழகோரி நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புதுமனை புகுவிழாவிற்கு நேரில் சென்று அழைக்கவில்லை என்றால் சரிதான். புதுமனை புகுவிழாவிற்கு நான் நேரில் அழைக்காததால்தான் அவர்கள் வரவில்லை என்றும், நான் சேர்ந்து வாழ எந்தவிதமான நடவடிக்கை எடுக்காததற்கு காரணம் எனக்கு அ.சா.1 உடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்பதால்தான் என்றால் சரியல்ல. முதல்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் இந்த வழக்கிற்கு எந்த சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 டிவிசி எண். 1/2016 வழக்கில் நான் பொள்ளாச்சி நீதிமன்றத்தில் ஆஜராகி சேர்ந்து வாழுவதாக கூறினேன் என்றால் சரிதான். அதன் பின்னிட்டும் நான் சேர்ந்து வாழ கோரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நீதிமன்றம் எனக்கு எதிராக எந்த உத்தரவு பிறப்பிக்ககூடாது என்பதற்காக பொய்யாக பதில் மனு தாக்கல்

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்(FAC), கரூர்.

செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3) 30.11.2017 ம்தேதி எனக்கும், அ.சா.7 க்கும் சேங்கல்மலை வாரிவரதராஜர் பெருமாள் கோவிலில் இரு வீட்டார்கள் சம்மதத்துடன் திருமணம் நடந்தது என்றால் சரியல்ல. 11.05.2018 ம்தேதி அ.சா.7 நித்யா உடன் நடந்த திருமணத்தை கரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு திருமணம் செய்தோம் என்றால் சரியல்ல. அ.சா.7 ஐ காவல்நிலையத்திற்கு வர சொன்னதாகவும், அங்கு சென்றவுடன அ.சா.7 மற்றும் அ.சா.8 ஐ திருமணம் செய்ததாக சொன்ன தகவலையும், ஆவணங்களின் அடிப்படையில் அ.சா.7 மற்றும் 8 ன் மீது குற்றவியல் நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை. அ.சா.1 ஜோதி முருகேஸ்வரி விவாகரத்துகோரி HMOP NO. 189/2019 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். முதல் திருமணம் நடைமுறையில் இருக்கும்போது 2 வது திருமணம் சட்டப்படி செய்யக்கூடாது என்றால் சரிதான். அ.சா.7, பிரதீப்பை காதலித்து வந்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இருந்து நானும், எனது குடும்பத்தாரும் தப்பிப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகிளா நீதிமன்றம்(FAC),

கரூர்.